<u>சாதாரணக்கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 2022-ம் ஆண்டு சுபகிருது வருடம் நவம்பர் மாதம் **30.11.2022–ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு** நகர்மன்றக் கூட்ட அறையில் நடைபெறும். அது சமயம் கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்ய குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் : 206 / 2022</u>**

ஆணையர் அவர்களின் செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2022–ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 1117 / 2022 / சி1)

**<u>தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 207 / 2022</u>**

நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2022–ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 1117 / 2022 / சி1)

**<u>தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 208 / 2022</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் (TN42 AU 5638) பொறியியல் பிரிவு உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் ஈப்பு வாகனத்தின் சில உதிரி பாகங்கள் தேய்மானம் மற்றும் சில பழுதுகள் காரணமாக வாகனத்தை இயக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் தினசரி நடைபெறும் திட்டப்பணிகள், குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகளை ஆய்வு செய்ய வேண்டியுள்ளதால் ஈப்பு வாகனம் அவசியமாக உள்ளது. மேற்படி வாகனத்தை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான CAI நிறுவனத்தின் மூலம் பழுது சரி செய்யவும், அதற்காக வரப்பெற்ற பட்டியல் ரூ. 39,468 /– ஐ வங்கி காசோலையாக செலுத்தவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தொகை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 2579 / 2022 / இ1)

**<u>தீர்மானம் – வாகனம் பழுது சரிசெய்து தொகை வழங்கியதற்கு அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 209 / 2022</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு புதிதாக அலுவலக கட்டிடம் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அலுவலக கடிதம் ந.க.எண். 17859 / 2022 / MA1, நாள்.02.07.2022 மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உப்புப்பாளையம் பகுதியில் கட்டிடம் கட்ட மண் பரிசோதனை செய்து சான்று வழங்க கோயமுத்தூர் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பியதில் மேற்படி இடத்தின் மண் பரிசோதனை செய்து சான்று வழங்க கட்டணம் ரூ.1,25,080/-ஐ The Principal, Coimbatore Institute of Technology என்ற பெயரில் செலுத்த பட்டியல் (எண். 037 / 22-23, நாள்.15.07.2022) வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை The Principal, Coimbatore Institute of Technology என்ற பெயரில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி தொகை செலுத்தியதை மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 801 / 2022 / இ1)

**<u>தீர்மானம் – புதிய அலுவலக கட்டிடம் கட்ட மண்பரிசோதனை செய்தமைக்கான தொகை செலுத்தியதற்கு அனுமதிக்கப்பட்டது</u>**

**தீர்மானம் : 210 / 2022**

நகராட்சிகளில் சொத்துவரி பொதுசீராய்வு 01.04.2022 முதல் அமல்படுத்துமாறு வெளியிடப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 30.03.2022-ம நாளிட்ட அரசாணை (நிலை) எண். 52 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 01.04.2022-ந்தேதிய ந.க.எண்.40032/2012/ஆர்1 சுற்றறிக்கையில் கண்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி வெள்ளகோவில் நகர்மன்றம் தனது 19.05.2022-ம் தேதிய 94-ஆம் தீர்மானத்தில் வெள்ளகோவில் நகராட்சிப் பகுதியை மண்டலங்களாகப் பிரித்தும், மண்டல வாரியான வரி உயர்வு காரணிகள், திருத்தம் செய்யப்பட்டும் அதற்கான மண்டல அடிப்படை மதிப்புத் தொகை ஆகியவற்றை திருப்பூர் மாவட்ட அரசிதழில் எண்.5. நாள் 27.06.2022ல் வெளியிடப்பட்டது. மேற்படி அரசிதழில் வெளியிடப்பட்டதில் பழைய மண்டல மதிப்புகளில் உயர்வு செய்வதற்கான காரணிகள் உடன் பெருக்கும் பொழுது தசம எண்களில் இரண்டு இலக்கங்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டது. அவ்வாறு கணக்கீடு செய்யும் போது சொத்துவரி தொகையானது வேறுபாடாக உள்ளது. எனவே உயர்வு செய்வதற்கான காரணிகளை மண்டல மதிப்பில் பெருக்கும் பொழுது கீழ்கண்டவாறு மண்டல மதிப்புக்கள் திருத்தி நிர்ணயம் செய்யவும், திருப்பூர் மாவட்ட அரசிதழ் எண். 5, நாள் 27.06.2022 பக்கம் எண். 67, 68-ல் உள்ள புதிய மண்டல மதிப்புகளுக்கு திருத்திய கீழ்கண்ட அட்டவணையின்படி அரசிதழ் வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**2022 - 2023 முதல் அரையாண்டிலிருந்து சொத்துவரி உயர்வு காரணிகள் மற்றும் மண்டல அடிப்படை மதிப்பு (திருத்திய) விவரம் பின்வருமாறு**

<table>
<tr><th rowspan="3">பரப்பளவு ச.அடி</th><th rowspan="3">உயர்வு செய்வதற்கான காரணி</th><th colspan="6">மண்டலம்</th></tr>
<tr><th colspan="2">A</th><th colspan="2">B</th><th colspan="2">C</th></tr>
<tr><th>பழைய மண்டல மதிப்பு (ரூ)</th><th>புதிய மண்டலம் மதிப்பு (ரூ)</th><th>பழைய மண்டல மதிப்பு (ரூ)</th><th>புதிய மண்டலம் மதிப்பு (ரூ)</th><th>பழைய மண்டல மதிப்பு (ரூ)</th><th>புதிய மண்டலம் மதிப்பு (ரூ)</th></tr>
<tr><td>குடியிருப்பு</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>600 சதுர அடி வரை</td><td>1.25</td><td rowspan="9">1.25</td><td>1.5625</td><td rowspan="9">0. 75</td><td>0.9375</td><td rowspan="9">0.50</td><td>0.6250</td></tr>
<tr><td>601-1200</td><td>1.50</td><td>1.8750</td><td>1.1250</td><td>0.7500</td></tr>
<tr><td>1201-1800</td><td>1.75</td><td>2.1875</td><td>1.3125</td><td>0.8750</td></tr>
<tr><td>1801-க்கு மேல்</td><td>2.00</td><td>2.5000</td><td>1.5000</td><td>1.0000</td></tr>
<tr><td>குடியிருப்பு அல்லாதவை</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>கல்வி நிறுவனங்கள்</td><td>1.75</td><td>2.1875</td><td>1.3125</td><td>0.8750</td></tr>
<tr><td>தொழிற்சாலை</td><td>1.75</td><td>2.1875</td><td>1.3125</td><td>0.8750</td></tr>
<tr><td>வணிகம்</td><td>2.00</td><td>2.5000</td><td>1.5000</td><td>1.0000</td></tr>
<tr><td colspan="8">பொது சீராய்வில் நிர்ணயிக்கப்படும் ஆண்டு மதிப்பில் தற்போது அமலில் உள்ள சொத்துவரி விகிதமான 10% சதவீதம் அரையாண்டு வரியாக நிர்ணயம் செய்யப்படுகிறது</td></tr>
</table>

**அலுவலக குறிப்பு :–**

அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1222 / 2022 / அ1)

**தீர்மானம் – சொத்துவரி திருத்திய மண்டல மதிப்பை அரசிதழில் விளம்பரம் செய்ய அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 211 / 2022**

இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண். TN 33 AZ 7537 வாகனத்திற்கான தகுதி சான்று 18.10.2022ம் தேதியுடன் முடிவடைவதால், தகுதி சான்று மற்றும் பழுதுகள் சரிசெய்ய இந்நகராட்சி மன்ற தீர்மான எண். 190 / 2022 நாள். 30.09.2022ன் படி 13.10.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. விபரம் பின்வருமாறு.

| வரிசை எண் | பணியின் பெயர் | காந்தி மோட்டர்ஸ், ஈரோடு | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் |
|---|---|---|---|
| 1 | TN 33 AZ 7537 டிப்பர் லாரி வாகனம் தகுதி சான்று மற்றும் பழுதுகள் சரிசெய்தல் பணி | ரூ. 1,84,700/- | ரூ. 1,94,150/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தெரிவித்துள்ள காந்தி மோட்டர்ஸ், ஈரோடு நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2720 / 2022 / எச்1)

**<u>தீர்மானம் – குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த காந்தி மோட்டார்ஸ், ஈரோடு நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 212 / 2022</u>**

திரு. இராதாகிருஷ்ணன் பார்த்திபன், திரைக்கலைஞன் "**இரவின் நிழல்**" திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க அரசைக் கேட்டு மனு அளித்துள்ளதாகவும், இக்கோரிக்கை மனு மீதான உள்ளாட்சி நகர்மன்றங்களின் முடிவினை அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 23124 / ஆர் - 1 / 2022-1, நாள். 23.09.2022 ஆம் நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட "**இரவின் நிழல்**" திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிப்பது குறித்து 2017-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார அமைப்புகளின் கேளிக்கை வரிச் சட்டத்தின் (Tamil Nadu Entertainment Tax Act 2017) பிரிவு 11(1)–ன் படி கேளிக்கை வரி விலக்கு அளிக்க நகர்மன்ற முடிவுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 1087 / 2017 / அ1)**

**<u>தீர்மானம் – இரவின் நிழல் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 213 / 2022</u>**

இந்நகராட்சி பொது சுகாதார வாகன எண். TN 42 Y 3074 மற்றும் TN 33 AZ 7538ற்கு தகுதி சான்று முடிவடைவதால் பழுதுகள் சரிசெய்து தகுதி சான்று பெற இந்நகராட்சி மன்ற தீர்மான எண். 12 / 2022 நாள். 30.03.2022ல் உத்தேச மதிப்பீட்டு தொகையாக ரூ. 3,50,000/-திற்கு அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த காந்தி மோட்டார்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை இந்நகராட்சி மன்ற தீர்மான எண். 54 / 2022 நாள். 10.05.2022 அனுமதி பெறப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டது. காந்தி மோட்டார்ஸ் நிறுவனத்தின் கடிதத்தில் மேற்படி தகுதி சான்று பெறும் போது மேற்படி TN 33 AZ 7538 வாகனம் கொள்முதல் செய்து 15 ஆண்டுகள் கடந்துள்ளதால் புதிய மோட்டார் வாகன சட்டப்படி புதிய FC தொகையினை உயர்த்தி உள்ளதால் கீழ்கண்டவாறு கூடுதல் கட்டணம் செலுத்தியதற்கு தொகை வழங்க கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | பில் நெம்பர் | தேதி | தொகை |
|---|---|---|---|
| 1 | Kangeyam RTO Office<br>TN 220618V6521026<br>TN 220618C8515085 | 18.06.2022<br>18.06.2022 | 14750<br>50 |
| 2 | Kangeyam RTO Office<br>TN 220614V3123102<br>TN 220614C9131979 | 14.06.2022 | 505 |
| 3 | Kangeyam RTO Office<br>TN 220618V1520836<br>TN 220618C7514952 | 18.06.2022 | 505 |
| | **Total** | | **15810** |
| | **ஒப்பந்தப்புள்ளியில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை** | | **2000** |
| | **கூடுதல் செலவினம்** | | **13810** |

எனவே மேற்படி புதிய மோட்டார் வாகனம் சட்டம் 01.04.2022 முதல் நடைமுறைக்கு வந்ததை ஒட்டி எதிர்பாரா கூடுதல் செலவினம் ஏற்பட்டதை தொடர்ந்து ஒப்பந்ததாரரின் விண்ணபத்தினை ஏற்று ஒப்பந்தப்புள்ளியை விட கூடுதல் செலவினம் ரூ. 13810/- ஒப்பந்தாரருக்கு வழங்கியதை மன்ற அனுமதிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2160 / 2021 / எச்1)**

**<u>தீர்மானம் – ஒப்பந்தப்புள்ளியைவிட கூடுதல் செலவினத்தொகை வழங்கியமைக்கு அனுமதிக்கப்பட்டது</u>**

**தீர்மானம் : 214 / 2022**

வெள்ளகோவில் நகராட்சியில் 15–வது நிதிக்குழு மானிய திட்டம் 2021 - 22ன் கீழ் கீழ்காணும் பணிக்கு 29.09.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட சொரியங்கிணத்துப்பாளையம் உரக்கிடங்கில் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளுதல். | 4,40,000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், | 0.50% குறைவாக |
| 2) | எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், | 1.58% அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், ஒப்பந்த புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், 0.50% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.
(கோப்பு எண். 1494 / 2021 / இ1)

**தீர்மானம் – குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதற்கு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 215 / 2022**

வெள்ளகோவில் நகராட்சியில் 15–வது நிதிக்குழு மானிய திட்டம் 2021 - 22ன் கீழ் கீழ்காணும் பணிக்கு 29.09.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட சொரியங்கிணத்துப்பாளையம் உரக்கிடங்கில் உள்ள வளமீட்பு மையத்தில் (RRC) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3,70,000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், | 0.47% குறைவாக |
| 2) | எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், | 1.44% அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், ஒப்பந்த புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், 0.47% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.
(கோப்பு எண். 1494 / 2021 / இ1)

**தீர்மானம் – குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதற்கு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 216 / 2022**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட மு.பழனிச்சாமி நகர் மற்றும் மு.பழனிச்சாமி நகர் கிழக்கு பகுதியில் ஆழ்குழாய் கிணற்றில் இருந்து அருகில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து (தனியாருக்கு சொந்தமான இடத்தில்) பொதுமக்களுக்கு பயன்படுத்தும் விதமாக அமைக்கப்பட்டது. ஆனால் சின்டெக்ஸ் தொட்டி தனியார் இடத்தில் உள்ளதால், அவ்விடத்தின் உரிமையாளர் மின்மோட்டார் இயக்க அனுமதிக்காததால் பொதுமக்கள் குடிநீர் எடுப்பதில் சிரமமாக உள்ளது என 12–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார். எனவே பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 2789 / 2022 / இ1)

**தீர்மானம் – பணியின் அவசர அவசியம் கருதி பணிமேற்கொண்டது அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் : 217 / 2022</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் 2022-23–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 07.10.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட மு.பழனிச்சாமி நகர் மற்றும் மு.பழனிச்சாமி நகர் கிழக்கு பகுதியில் சின்டெக்ஸ் டேங்க்–ஐ இடமாற்றம் செய்தல். | 1,80,000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், | 0.22% குறைவாக |
| 2) | எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், | 0.65% அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், ஒப்பந்த புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், 0.22% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் வேலை உத்தரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 2789 / 2022 / இ1)

**<u>தீர்மானம் – பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியது அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>தீர்மானம் : 218 / 2022</u>**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2019-20–ன் கீழ் 2022-23-ஆம் ஆண்டிற்கு திரு. அ. கணேசமூர்த்தி, ஈரோடு தொகுதி மக்களவை உறுப்பினர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பூர் அவர்கள் அலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 692/2020/A2, நாள்.14.10.2022 மூலம் ரூ. 2.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | Drilling of new Borewell and Hand Pump @ Sri Ram Nagar in Vellakovil Municipality | 1,00,000 |
| 2 | Construction of Parapet wall for Culvert @ Kadaiyuranvalasu PAP Canal in Vellakovil Municipality. | 1,00,000 |
| | | |

(கோப்பு எண். 2258 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 219 / 2022</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு நடைபெற்று வரும் / நடைபெற உள்ள திட்டப்பணிகள் விவரத்தினை பொதுமக்களுக்கு கொண்டு செல்லும் வகையில் நாளிதழ் மற்றும் தொழில்மலரில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்காணும் விவரப்படி பட்டியல்கள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | நாளிதழ் பெயர் | பட்டியல் எண். / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மாலை மலர் | TRI – D22080131, 30.08.2022 | 9,975.00 |
| 2 | தினத்தந்தி | 2223TPR311018845, 03.10.2022 | 15,876.00 |
| 3 | தினகரன் | 3300377644, 04.10.2022 | 15,750.00 |
| 4 | காலைக்கதிர் | SL22/1814, 04.10.2022 | 8,400.00 |
| 5 | தினமணி | CBETN40067083B, 04.10.2022 | 21,000.00 |
| | **மொத்தம் ரூ.** | | **71,001.00** |

மேற்படி தொகையினை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு காசோலை மூலம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 2515 / 2022 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 220 / 2022**

வெள்ளகோவில் நகராட்சியில் மின்மோட்டார் இயக்குதல், ஈப்பு வாகன ஓட்டுநர், குடிநீர் குழாய் இயக்குபவர் போன்ற பணிகள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அலுவலக கடிதம் ந.க.எண்.21187 / 2021 / EA2, நாள்.02.10.2021–மூலம் புதியதாக பணியாளர்கள் நியமிப்பது குறித்து அளவுகோல் வழிமுறைகள் வழங்கப்பட்டதின் அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்ய திட்டக் கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி திட்டம் அனுமதி பெறப்பட்டு செயல்படுத்துப்படும் வரை ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை செய்யும் ஒப்பந்ததாரரை கால நீட்டிப்பு செய்து ஏற்கனவே வழங்கிய ஒப்பந்த விகிதத்தில் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 01.09.2022 முதல் 30.09.2022, மற்றும் 01.10.2022 முதல் 31.10.2022 வரை பணி மேற்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.11.2022 முதல் 30.11.2022 வரை பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2021 / இ1)

**தீர்மானம் – 01.09.2022 முதல் 30.10.2022 வரை பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும், நவம்பர் மாதம் பணிமேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 221 / 2022**

வெள்ளகோவில் நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடிவடிக்கையில் உள்ளது. இந்த மதிப்பீடுகளில் சேவை வரி GST:12% அளவிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் (மதிப்பீடு தயார் செய்த பின்னர்) சேவை வரி 18% அளவிற்கு உயர்ந்துள்ளதால் ஒப்பந்தகாரர்கள் வித்தியாசத் தொகையை வழங்க கோரியுள்ளனர். இதற்கு இந்த மதிப்பீட்டில் வழிவகை இல்லை. எனவே இந்த மதிப்பீடுகளை ரத்து செய்து விட்டு கீழ்கண்டுள்ள விபரப்படி திருத்திய மதிப்பீடுகளை அனுமதிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு | திருத்திய மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | சொரியங்கிணத்துப்பாளையம் ஆதிதிராவிடர் காலனி, நாச்சிபாளையம், SKR காலனியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துதல் | 6.50 | 6.90 |
| 2 | ராஜுவ்நகர், வி.பி.எம்.எஸ் நகர் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல், செம்மாண்டம்பாளையம் ரோடு பகுதியில் தண்ணீர் தொட்டி மேடை பழுதுகள் சரிசெய்தல். | 8.10 | 8.60 |
| 3 | திருவள்ளுவர் நகரில் சின்டெக்ஸ் டேங்க்–ஐ மாற்றியமைத்தல். | 0.75 | 0.80 |
| 4 | உப்புப்பாளையம் ஆதிதிராவிடர் காலனியில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் மின்மோட்டார் பொருத்துதல். | 3.00 | 3.20 |
| 5 | மு.பழனிச்சாமி நகரில் மின்மோட்டார் பொருத்துதல். | 0.65 | 0.70 |
| 6 | LKC நகர் சந்தை பகுதியில் MCC பழுதுகள் சரிசெய்தல். | 3.00 | 3.20 |
| 7 | உயர்கோபுர மின்விளக்குகளில் பழுதுகள் சரிசெய்தல். | 2.20 | 2.35 |
| 8 | இந்திரா நகரில் மின்மோட்டார் பழுதுகள் சரிசெய்தல். | 1.25 | 1.35 |
| 9 | பொதுசுகாதார பணிக்கு Pushcard விநியோகம் செய்தல் | 2.00 | 2.15 |

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3168 / 2022 / இ1)

**தீர்மானம் – திருத்திய மதிப்பீடு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 222 / 2022**

வெள்ளகோவில் நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2019-20-ன்கீழ் கீழ்காணும் பணிக்கு 08.11.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட காடையூரான்வலசு பகுதியில் உள்ள PAP வாய்க்காலில் தடுப்புச் சுவர் அமைத்தல். | 1,00,000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், | 0.28% குறைவாக |
| 2) | ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், | 0.57% அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், ஒப்பந்த புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், 0.28% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 2258 / 2022 / இ1)

**தீர்மானம் – பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 223 / 2022**

வெள்ளகோவில் நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2019-20-ன்கீழ் கீழ்காணும் பணிக்கு 08.11.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட ஸ்ரீ ராம் நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து கைபம்பு பொருத்துதல். | 1,00,000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், | 0.07% குறைவாக |
| 2) | ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், | 0.94% அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், ஒப்பந்த புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், 0.07% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 2258 / 2022 / இ1)

**தீர்மானம் – பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 224 / 2022**

வெள்ளகோவில் நகராட்சியில் மாநில பகிர்வு நிதி 2022-23 மற்றும் 2023-24–ன் கீழ் உப்புப்பாளையம் பகுதியில் நகராட்சி நிர்வாக வசதிக்காக புதிய அலுவலக கட்டிடம் அமைக்கும் பணிக்கு ரூ.350.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு மூலம் வழங்கப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு கட்டிட வடிவமைப்பு (Structural Design) பெற Coimbatore Institute of Technology, Coimbatore நிறுவனத்திடமிருந்து

ரூ.2,60,457/– செலுத்த பட்டியல் நாள்.19.10.2022 மூலம் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வங்கி வரவோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும்.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 801 / 2022 / இ1)

**தீர்மானம் – தொகை செலுத்தியமைக்கு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 225 / 2022**

வெள்ளகோவில் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்புப்பணியில் 300 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் என DBC கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.1588/J1/2015 – நாள். 16.10.2015 கடிதத்தின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்களின் கடித எண்.5453/2019/உ3 நாள்.11.08.2020 கடிதத்தின்படி கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு வீடுகளுக்கு ஏற்ப கொசு ஒழிப்பு பணியாளர்களை நியமனம் செய்து நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளவும் உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சியில் 15933 வீடுகளுக்கு 56 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்பொழுது இந்நகராட்சியில் கொசுப்புழு ஒழிப்பு பணி 21 வார்டுகளிலும் 48 நபர்கள் மூலம் கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சிதலைவர், திருப்பூர் மற்றும் துணை இயக்குநர் சுகாதாரதுறை, திருப்பூர் அவர்களது ஆய்வுகூட்ட அறிவுரைகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க DBC பணியாளர்களை கொண்டு வீடு வீடாக சோதனை செய்து கொசுப்புழு உற்பத்தியை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி DBC பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமணம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் செப்டம்பர் 2022 மாதம் வரை பணியார்களுக்கு ஊதியம் வழங்கவும் மன்ற தீர்மானம் எண்.162/2022 நாள்.22.08.2022ல் அனுமதிக்கப்பட்டது. மேற்படி அனுமதியின் பேரில் DBC பணியாளர்கள் சப்ளை செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி இவ்வலுவலக கோப்பு எண்.1615/2022/எச்1ல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மழைக்காலம் என்பதால் கொசு ஒழிப்பு அத்தியாவசிய பணியின் அவசியம் கருதி (01.10.2022 முதல் 31.10.2022) அக்டோபர் 2022ம் மாதத்திற்கு பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும், தொகை வழங்கவும் மற்றும் நவம்பர் 2022, டிசம்பர் 2022 மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்குகாய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டும், பொது சுகாதார நலன் கருதியும், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மழைக்காலம் என்பதால் கொசு ஒழிப்பு அத்தியாவசிய பணியின் அவசியம் கருதி வெளிக்கொணர்வு மூலம் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு (01.10.2022 முதல் 31.10.2022) அக்டோபர் 2022ம் மாதத்திற்கு பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும் மற்றும் நவம்பர் 2022, டிசம்பர் 2022 மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து மேற்கண்ட மாதங்களுக்கான தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு.எண். 862/ 2015/ எச்1 )**

**தீர்மானம் – அக்டோபர் மாதம் பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதம் கால நீட்டிப்பு செய்து கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 226 / 2022**

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி அலுவலக பொதுப்பிரிவில் கணினிகளை இயக்க 3 நபர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் ஒப்பந்ததாரருக்கு 01.08.2022 முதல் இரண்டு மாதத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 171/ 2022, நாள். 22.08.2022–ன்படி அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து வழங்கிய அனுமதியானது கடந்த 30.09.2022ம் தேதியுடன் முடிவடைகிறது. மேற்படி பணிக்கு வெளிக்கொணர்வு மூலம் ஒப்பந்த பணியாளர்களை பணியமர்த்த ஒப்பந்தபுள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரான M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.595/–ஐ (ஆயுள் காப்பீடு தொகை மற்றும் EPF 13.61% உட்பட) ஏற்க மன்ற அனுமதி வேண்டியும் தொடர்ந்து இந்த நிறுவனத்தார் பணிகளை செய்து வருவதாலும் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்யப்படும் வரை ஏற்கனவே மூன்று ஒப்பந்த தட்டச்சர்களை சப்ளை செய்த M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு **(01.10.2022 முதல் 31.10.2022)**

அக்டோபர் 2022ம் மாதத்திற்கு பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும் மற்றும் நவம்பர் 2022, டிசம்பர் 2022 மாதத்திற்கு மேற்கண்ட நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி மேற்கண்ட மாதங்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

இந்நகராட்சிக்கு நிரந்தர தட்டச்சர்கள் பணிநியமனம் இல்லாததால், அவசர அவசியத்தினை முன்னிட்டு, 3 கணினி தட்டச்சர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்த M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு **(01.10.2022 முதல் 31.10.2022)** அக்டோபர் 2022ம் மாதத்திற்கு பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும் மற்றும் நவம்பர் 2022, டிசம்பர் 2022 மாதத்திற்கு மேற்கண்ட நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி மேற்கண்ட மாதங்களுக்கு தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 631 / 2018 / எச்1)**

**தீர்மானம் – அக்டோபர் மாதம் பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதம் கால நீட்டிப்பு செய்து கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 227 / 2022**

வெள்ளகோவில் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் துப்புரவு பணி செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி எண். K.Dis.No. 28369 / J3, நாள். 04.12.2018 அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 221 ஆகும். ஆனால் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். குறைவான துப்புரவு பணியாளர்களே இருப்பதால் துப்புரவு பணி பாதிக்கப்படாமல் இருக்க இந்நகர்மன்ற தீர்மான எண். 172/ 2022, நாள். 22.08.2022–ன் படி 117 பேர் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் தனியார் மூலம் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 535 /- என்ற தினக்கூலி அடிப்படையில் இந்நகராட்சியில் 21 வார்டுகளிலும் துப்புரவு பணி செய்ய அனுமதி வழங்கப்பட்டு 01.08.2022 முதல் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி காலமானது 30.09.2022-ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.**21787/2021**/EA2 நாள்.**02.10.2021**ல் நகராட்சிகளில் அடிப்படை பணிகளை திறம்பட செய்திட வேண்டிய பணியாட்கள் போதுமானதாக இல்லாத நிலையில் பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த பணியாளர்கள் அமர்த்த கருத்துரு அனுப்ப தெரிவிக்கப்பட்டதன்படி இவ்வலுவலக கடித ந.க.எண்.**1334/2021/எச்1** நாள்.**15.10.2021**ல் கருத்துரு அனுப்பபட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ளது.

மேற்படி கருத்துரு தொடர்பாக உரிய உத்திரவுகள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் உத்திரவுகள் வரப்பெறாததால் அத்தியாவசியப்பணியான துப்புரவு பணி பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தாலும், ஒப்பந்ததாரர் திரு. M/s. துரை அன்கோ அவர்களுக்கு ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுடன் வரும் காலங்களில் அரசிடமிருந்தும், நகராட்சியிலிருந்தும் பிறப்பிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுடன் சேர்த்து 117 ஒப்பந்த துப்புரவு பணியாளர்களை ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தினக்கூலி நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 535 /–என்ற விகிதத்தில் பணி மேற்கொள்ள காலநீட்டிப்பு செய்து M/s. துரை அன்கோ நிறுவனத்தின் மூலம் **(01.10.2022** முதல் **31.10.2022** வரை**)** அக்டோபர் **2022**ம் மாதத்திற்கு பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும் மற்றும் நவம்பர் **2022**, டிசம்பர் **2022** மாதத்திற்கு மேற்கண்ட நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி மேற்கண்ட மாதங்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

நகரின் தூய்மைப் பணி பாதிக்கப்படாமல் இருக்கும் நோக்கில் பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் தினக்கூலி விகிதத்தின்படி தற்போதைய ஒப்பந்ததாரர் M/s.துரை அன்கோ நிறுவனத்திடம் (01.10.2022 முதல் 31.10.2022) அக்டோபர் 2022 மாதம் பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும் மற்றும் நவம்பர் 2022, டிசம்பர் 2022 மாதத்திற்கு மேற்கண்ட நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி மேற்கண்ட மாதங்களுக்கு தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 469 / 2020 / எச்1)**

**தீர்மானம் – அக்டோபர் மாதம் பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதம் கால நீட்டிப்பு செய்து கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 228 / 2022**

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் கனரக வாகனங்களை இயக்க 4 நபர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ,

ஜெயங்கொண்டம் ஒப்பந்ததாரருக்கு 01.08.2022 முதல் இந்நகர்மன்ற தீர்மானம் எண். 173/2022, நாள். 22.08.2022—ன்படி இரண்டு மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து வழங்கிய அனுமதி கடந்த 30.09.2022 —ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.**21787/2021**/EA2 நாள்.**02.10.2021**ல் நகராட்சிகளில் அடிப்படை பணிகளை திறம்பட செய்திட வேண்டிய பணியாட்கள் போதுமானதாக இல்லாத நிலையில் பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த பணியாளர்கள் அமர்த்த கருத்துரு அனுப்ப தெரிவிக்கப்பட்டதன்படி இவ்வலுவலக கடித ந.க.எண்.**1334/2021**/எச்**1** நாள்.**15.10.2021**ல் கருத்துரு அனுப்பபட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ளது.

மேற்படி கருத்துரு தொடர்பாக உரிய உத்திரவுகள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் உத்திரவுகள் வரப்பெறாததால் அத்தியாவசியப்பணியான துப்புரவு பணி பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தாலும், ஒப்பந்ததாரர் திரு. M/s. துரை அன்கோ அவர்களுக்கு ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுடன் வரும் காலங்களில் அரசிடமிருந்தும், நகராட்சியிலிருந்தும் பிறப்பிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுடன் சேர்த்து 4 ஒப்பந்த ஓட்டுநர்களை ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தினக்கூலி நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.595/—என்ற விகிதத்தில் பணி மேற்கொள்ள காலநீட்டிப்பு செய்து M/s. துரை அன்கோ நிறுவனத்தின் மூலம்(**01.10.2022** முதல் **31.10.2022** வரை) அக்டோபர் **2022**ம் மாதத்திற்கு பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும் மற்றும் நவம்பர் **2022**, டிசம்பர் **2022** மாதத்திற்கு மேற்கண்ட நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி மேற்கண்ட மாதங்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு போதுமான நிரந்தர ஓட்டுநர் இல்லாத காரணத்தின் அவசர அவசியம் கருதி நகரில் குப்பைகள் தேங்காவண்ணம் சுகாதாரமாக வைக்கவும், வெளிக்கொணர்வு மூலம் ஏற்கனவே பணிமேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் M/s.துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.10.2022 முதல் 31.10.2022 வரை பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும் மற்றும் நவம்பர் **2022**, டிசம்பர் **2022** மாதத்திற்கு மேற்கண்ட நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி மேற்கண்ட மாதங்களுக்கு தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 607 / 2018 / எச்1)**

<u>**தீர்மானம் — அக்டோபர் மாதம் பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதம் கால நீட்டிப்பு செய்து கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது**</u>

<u>**தீர்மானம் : 229 / 2022**</u>

வெள்ளகோவில் நகராட்சி பகுதியில் பொதுசுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் பொது மக்களுக்கும், குழந்தைகளுக்கும் அச்சம் உண்டாக்கும் வகையில் தெருநாய்கள் வீதிகளில் சுற்றித்திரிவதாக பொது மக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே தற்போது நகராட்சி பகுதியில் உள்ள வீதிகளில் சுற்றித்திரியும் நாய்களுக்கு (கணக்கெடுப்பின்படி **365**) விலங்குகள் நலவாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்கடி தடுப்பூசி செலுத்தும் பணி மேற்கொள்ளவும், விலங்குகள் கட்டுப்பாடு ஏபிசி திட்டத்தின்படி (அரசாணை எண்.**181**, நாள். **05.04.2013**) நாய்ஒன்றுக்கு ரூ. **700**/— வீதம் **365** நாய்களுக்கு ரூ.**2,55,500**/— செலவினம் மேற்கொள்ளவும் மன்ற தீர்மான எண்.**116/2022** நாள். **29.06.2022**ல் அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது Animal welfare board of india, New delhi அலுவலக கடித F.No.24-02/2020-21 ABC நாள்.**05.04.2022**ல் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கு நாய் ஒன்றுக்கு ரூ.**1,450**/— என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் நகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் **365** (கணக்கெடுப்பின்படி) நாய்களுக்கு ரூ.**1,450**/— வீதம் மொத்தம் ரூ.**5,29,250**/—ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1515/2022/எச்1.

<u>**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**</u>

<u>**தீர்மானம் : 230 / 2022**</u>

வெள்ளகோவில் நகராட்சி பகுதியில் பொதுசுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் பொது மக்களுக்கும், குழந்தைகளுக்கும் அச்சம் உண்டாக்கும் வகையில் தெருநாய்கள்

வீதிகளில் சுற்றித்திரிவதாக பொது மக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே தற்போது நகராட்சி பகுதியில் உள்ள வீதிகளில் சுற்றித்திரியும் நாய்களுக்கு (கணக்கெடுப்பின்படி 365) விலங்குகள் நலவாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்கடி தடுப்பூசி செலுத்தும் பணி மேற்கொள்ளவும், விலங்குகள் கட்டுப்பாடு ஏபிசி திட்டத்தின்படி (அரசாணை எண்.181, நாள். 05.04.2013) நாய் ஒன்றுக்கு ரூ. 700/– வீதம் 365 நாய்களுக்கு ரூ.2,55,500/– செலவினம் மேற்கொள்ளவும் மன்ற தீர்மான எண்.116/2022 நாள். 29.06.2022ல் அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் மேற்படி பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | மாஸ் டிரஸ்ட், 56ஏ, சௌத் பஸார், பாளையம் கோட்டை, திருநெல்வேலி | ரூ.1,400/– |
| 2 | ஹெட் டிரஸ்ட், அன்னை இந்திரா வீதி, எம்.ஜி.ஆர் நகர், தேனி | ரூ.1,450/– |
| 3 | மு.செல்வக்குமார், வின்னர் தொண்டு நிறுவனம், மதுரை | ரூ.1,500/– |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் ஏற்கனவே அனுமதித்த கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கு நாய் ஒன்றுக்கு ரூ.700/– வீதம் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது Animal welfare board of india, New delhi அலுவலக கடித F.No.24-02/2020-21 ABC நாள்.05.04.2022ல் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கு நாய் ஒன்றுக்கு ரூ.1,450/– என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே தற்போதைய விலைவிகிதப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி தெரிவித்துள்ள மாஸ் டிரஸ்ட் திருநெல்வேலி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1515/2022/எச்1.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 231 / 2022**

இந்நகராட்சியில் 15–வது நிதிக்குழு மானியத்தில் பொது சுகாதார பயன்பாட்டிற்கு 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட சல்லேஜ் லாரி (கழிவு நீர் வண்டி) வாகன எண். TN 42 AX 5322 கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது. இந்நகராட்சியானது 54.87 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 21 வார்டுகளும், 15961 குடியிருப்பு, வணிகம் மற்றும் தொழில் நிறுவன வரிவிதிப்புகள் 3591 ஆக மொத்தம் 19552 வரிவிதிப்புகள் உள்ளது. மேற்படி கழிவு நீர் வாகனம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு செல்ல ஏதுவாக பயன்பாட்டு கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

எனவே மேற்படி தற்போதைய சந்தை மதிப்பீன்படி 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட கழிவு நீர் வாகனம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு மட்டும் கழிவு நீர் தொட்டியை சுத்தம் செய்ய (நடை ஒன்றுக்கு) ரூ.3000/– தொகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பயன்பாட்டுக் கட்டணம் நிர்ணயம் செய்வது குறித்து மன்றத்தின் முடிவிற்கு.

**(ந.க.எண். 2584 / 2022 / எச்1)**

**தீர்மானம் – கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்ய நடை ஒன்றுக்கு ரூ. 3000 /–க்கு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 232 / 2022**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும், 2022 – 2023ம் ஆண்டிற்கான சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், உரிமக்கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களில் 100 சதவீதம் உரிய காலத்திற்குள் வசூல் செய்யவும், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் சிறப்பு முகாம், வாக்காளர் அட்டையுடன் ஆதார் எண் இணைத்தல், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான கூட்டம், மாவட்ட புத்தக திருவிழா மற்றும் அரசு / மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து வரப்பெறும் முக்கிய அறிவிப்புகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைபுள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு:-

| வ. எண் | விலைப்புள்ளி அளித்தவரின் விபரம் | நாள் ஒன்றுக்கு தொகை (டீசல் உட்பட) |
|---|---|---|
| 1 | M. முருகேசன், ஆட்டோ ஓட்டுநர், கரூர் ரோடு, வெள்ளகோவில் | ரூ.3750/- |
| 2 | G. உதயகுமார்,<br>ஆட்டோ ஒட்டுநர், புதிய பேருந்து நிலையம், வெள்ளகோவில் | ரூ. 3500/– |
| 3 | A. பொன்னுசாமி, ஆட்டோ ஒட்டுநர், புதிய பேருந்து நிலையம், வெள்ளகோவில் | ரூ. 3600/- |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தெரிவித்துள்ள திரு. ஜி. உதயகுமார் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 2,00,000/–ஐ பொது நிதியில் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியத்தை கருதி ஆட்டோ விளம்பரம் செய்ய வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி பணிமேற்கொண்டமைக்கும் அதற்காகும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளஅனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3288 / 2022 / அ1)**

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 233 / 2022**

இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பேருந்து நிலைய கழிப்பிடம், வாரசந்தை வளாகம், துரைராமசாமி நகர் உயர்நிலைப்பள்ளி, அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளி, எல்.கே.சி நகர் பகுதியில் அமைந்துள்ள MCC Centre, ஆரம்ப சுகாதார நிலையம், நகராட்சி அலுவலகம் ஆகிய பகுதிகளில் உள்ள கழிப்பிடத்தில் பெண்களுக்கு தனியாக அமைக்கப்பட்டுள்ள கழிப்பறையில் நாப்கின்கள் பயன்படுத்துவதை எரியூட்டும் இயந்திரம் (Incinerator) கொண்டு எரியூட்டு செய்யப்பட்டு கழிப்பிடத்தை சுகாதாரமான முறையில் பயன்படுத்திட மேற்குறிப்பிட்ட இடங்களில் உள்ள கழிப்பிடங்களில் நாப்கின் எரியூட்டும் இயந்திரம் (Incinerator) 7 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.**4.00** லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.3268/2022/எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 234 / 2022**

வெள்ளகோவில் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் JCB வாகனம் எண். TN 42 V 6546–ல் பழுதுகள் ஏற்பட்டுள்ள நிலையில் மேற்படி வாகனத்தின் பழுதுகள் சரிசெய்யவும், புதிய டயர்கள் கொள்முதல் செய்யவும் இந்நகராட்சி மன்ற தீர்மான எண்.115, நாள். 29.06.2022–ல் மேற்படி செலவினம் மேற்கொள்ள ரூ. 1,84,500 /- மன்ற அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி பழுதுகளை சரிசெய்ய அங்கீரிக்கப்பட்ட நிறுவனமான M/S சூர்ய பாலா எர்த் மூவர்ஸ், சேலம் நிறுவனத்தின் பொறியாளர்களால் மேற்படி வாகனத்தை ஆய்வு செய்யப்பட்டு பழுதுகள் சரிசெய்ய உபகரணங்கள் ரூ. 2,02,129 /- மற்றும் லேபர்ஸ் கூலியாக ரூ. 66,146/- ஆக மொத்தம் ரூ. 2,68,275/-ற்கு உத்தேசப்பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும், தற்போது மழைக்காலம் என்பதாலும் மேற்படி வாகனத்தை சரிசெய்ய தெரிவிக்கப்பட்ட உத்தேச விலைப்புள்ளியை ஏற்று வேலைஉத்திரவு வழங்கியதையும், ஏற்கனவே மன்றம் அனுமதிக்கப்பட்ட தொகையுடன் கூடுதலாகும் செலவினத்தொகை ரூ. 83,775/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி பணிமேற்கொண்டதையும், தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1163/2022/எச்1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 235 / 2022**

நகராட்சிகளில் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்குதல், தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்பது குறித்து நகராட்சிகளின் தரம் வாரியாக வரம்பு (Monetary Limit) நிர்ணயம் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்

துறை மூலம் அரசாணை எண். 158, நாள். 02.11.2022 வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 1051 / 2021 / இ1)

**தீர்மானம் – பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 236 / 2022**

இந்நகராட்சிக்கு சொந்தமான கணபதிபாளையம் பகுதியில் உள்ள எரிவாயு தகனமேடையில் Flower மற்றும் Bearing பழுதடைந்து இயங்காத நிலையில் உள்ளது. இதனால் எரிவாயு தகனமேடை இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி எரிவாயு தகனமேடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.55,000/– தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2648 / 2022 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 237 / 2022**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட சொரியங்கிணத்துப்பாளையம் காலனி பகுதியில் விளையாட்டு மைதானம் அருகில் நகராட்சிக்கு சொந்தமான பொதுக்கிணறு உள்ளது. மேற்படி கிணற்றின் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சாலை வாகன போக்குவரத்து மற்றும் பள்ளிகளுக்குச் செல்லும் முக்கிய சாலையாக உள்ளது. மேற்படி கிணறுகள் சாலையின் ஓரமாக உள்ளதால் போக்குவரத்திற்கு ஆபத்தான நிலையில் உள்ளது. மேற்படி கிணற்றின் மேல் பகுதியில் இரும்பு மூடி அமைத்து கிணற்றின் மேல் பகுதியினை மூட வேண்டி உள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.30,000/– தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3013 / 2022 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 238 / 2022**

வெள்ளகோவில் நகராட்சியில் 2022-23–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 11.11.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட நடேசன் நகர் மற்றும் கரட்டுப்பாளையம் பகுதிகளில் கிணற்றிக்கு மூடி அமைத்தல். | 60,000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், | 0.31% குறைவாக |
| 2) | ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், | 1.74% அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், ஒப்பந்த புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், 0.31% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 2722 / 2022 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் : 239 / 2022</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் 2022-23–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 11.11.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட மூலனூர் ரோடு நீருந்து நீரேற்று நிலையம் மற்றும் செம்மாண்டம்பாளையம் பகுதியில் கேட்வால்வு அமைத்தல். | 56,000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், | 0.11% குறைவாக |
| 2) | ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், | 0.54% அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், ஒப்பந்த புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், 0.11% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை பார்வையிட்டு அங்கீகரிக்கலாம். (கோப்பு எண். 2072 / 2022 / இ1)

**<u>தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 240 / 2022</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் 2022-23–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 11.11.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 21 வரையிலான சிறு மின்விசைப்பம்புகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 8,10,000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், | 0.20% குறைவாக |
| 2) | எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், | 0.46% அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், ஒப்பந்த புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், 0.20% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை பார்வையிட்டு அங்கீகரிக்கலாம். (கோப்பு எண். 1078 / 2022 / இ1)

**<u>தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 241 / 2022</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் 2022-23–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 11.11.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காவிரி மற்றும் அமராவதி குடிநீர் திட்ட மெயின் குழாய்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 10,00,000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், | 0.11% குறைவாக |
| 2) | எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், | 2.01% அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், ஒப்பந்த புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், 0.11% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1078 / 2022 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

**தீர்மானம் : 242 / 2022**

வெள்ளகோவில் நகராட்சியில் 2022-23–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 11.11.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுக்குழாய் அமைத்தல் மற்றும் குழாய் விஸ்தரிப்பு செய்தல். | 5,00,000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், | 0.17% குறைவாக |
| 2) | ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், | 1.74% அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், ஒப்பந்த புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், 0.17% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1078 / 2022 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

**தீர்மானம் : 243 / 2022**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காவிரி மற்றும் அமராவதி குடிநீர் திட்டங்களிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்தக் குடிநீர் திட்ட மெயின் மற்றும் விநியோக குழாய்களில் பழுதுகள் ஏற்படும் பொழுதும், பழுதுகள் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், உடனடியாக பழுதுகள் சரிசெய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 19.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 11.05.2022 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. இதில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அலுவலக கடிதம் ந.க.எண். 24007 / 2022 / MA2 , நாள்.09.09.2022–ன் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் கருத்துரு சமர்ப்பித்து அனுமதி பெற்று பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் காணொலி காட்சி ஆய்வுக் கூட்டத்தில் குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகளை நகராட்சி நகர்மன்ற தீர்மானம் ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்பேரில் 11.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று நடவடிக்கையில் உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு புதியதாக ஒப்பந்ததாரர் நியமிக்கும் வரை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்த விகிதத்தில் பழைய ஒப்பந்ததாரரை பணியினை மேற்கொள்ள அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொண்டதையும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1078 / 2022 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 244 / 2022**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 21 வரையிலான பகுதிகளில் சிறு மின்விசைப்பம்பு திட்டங்கள் அமைக்கப்பட்டு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த

மின்விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும், பராமரிப்பு பணிக்காகவும் பணி மேற்கொள்ள 19.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 11.05.2022 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. இதில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அலுவலக கடிதம் ந.க.எண். 24007 / 2022 / MA2 , நாள்.09.09.2022–ன் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் கருத்துரு சமர்ப்பித்து அனுமதி பெற்று பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் காணொலி காட்சி ஆய்வுக் கூட்டத்தில் குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகளை நகராட்சி நகர்மன்ற தீர்மானம் ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்பேரில் 11.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று நடவடிக்கையில் உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு புதியதாக ஒப்பந்ததாரர் நியமிக்கும் வரை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்த விகிதத்தில் பழைய ஒப்பந்ததாரரை பணியினை மேற்கொள்ள அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொண்டதையும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1078 / 2022 / இ1)

**<u>தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 245 / 2022</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 சிவநாதபுரம் பகுதியில் உள்ள செம்மலர் கடையின் மேல்புறம் உள்ள வளைவில் சின்டெக்ஸ் டேங்க் பழுதடைந்துள்ளது. எனவே அப்பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்படாமல் உள்ளது. எனவே மேற்படி பணியினை சரிசெய்ய 19–வது நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார். மேற்படி குடிநீர் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள வேண்டி உள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.0.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 2910 / 2022 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 246 / 2022</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.05 கச்சேரிவலசு தோப்பு மணி வீடு அருகில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் பழுதடைந்துள்ளது. எனவே அப்பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்படாமல் உள்ளது. எனவே மேற்படி பணியினை சரிசெய்ய 5–வது நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார். மேற்படி குடிநீர் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள வேண்டி உள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 2911 / 2022 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 247 / 2022</u>**

நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட விபரப்படி கணினிகள், பிரிண்டர்கள் அலுவலக CCTV camera, Projector, Bio Metrics, VC Room accessories மற்றும் UPS ஆகியவைகள் உள்ளது.

**<u>கணினிகள்</u>**

| Sl.No. | Place | Details | Quantity |
|---|---|---|---|
| | **All-in-One** | | |
| 1 | Commissioner Room (AIO) | UTIS | 1 |
| 2 | Municipal Engineer Room (AIO) | UTIS | 1 |
| 3 | Computer Room (AIO) | Backup | 1 |
| | **Desktop** | | |
| 4 | Municipal Chairman Room | - | 1 |

| Sl.No. | Place | Details | Quantity |
|---|---|---|---|
| | **Computer room** | | |
| 5 | Computer Room | Server | 1 |
| 6 | Computer Room | Office system | 1 |
| 7 | Computer Room | Typist / Election | 1 |
| 8 | Computer Room | Tax Collection | 2 |
| | **General** | | |
| 9 | General Section | Accountant | 1 |
| 10 | General Section | Typist | 1 |
| | **Revenue** | | |
| 11 | Revenue Section | UTIS | 2 |
| | **Town Planning** | | |
| 12 | Town Planning Section | UTIS | 2 |
| | **Public Health** | | |
| 13 | Public Health Section | UTIS | 1 |
| 14 | Public Health Section | CRS / typist | 1 |
| | **Engineering** | | |
| 15 | Overseer Room | UTIS – Overseer | 1 |
| 16 | Overseer Room | UTIS – E1 | 1 |
| 17 | Overseer Room | Estimate Prepare | 2 |
| 18 | Overseer Room | Typist | 2 |
| | **Laptops** | | |
| 19 | Computer Room | Laptop | 1 |
| 20 | Overseer Room | Laptop | 3 |
| | | **Total** | **27** |

**பிரிண்டர்கள்**

| Sl. No. | Section | Printer Model | Total No. of Printers |
|---|---|---|---|
| 1 | Commissioner Room – 1 side | HP laser jet 1005 | 1 |
| 2 | Chairman Room | Cannon | 1 |
| 3 | Computer / SI Room – 2 side | HP laser jet P3015 | 2 |
| 4 | Computer Room – 2 side | HP laser jet M607dn | 1 |
| 5 | Computer Room – typist – 2 side | HP laser jet M427fdn | 1 |
| 6 | Town planning - 2 side | HP laser jet M427fdn | 1 |
| 7 | General Section – Accountant – 2 side | HP laser jet M202dw | 1 |
| 8 | Public health – 2 side | HP laser jet M226dn | 1 |
| 9 | Engineering / Revenue / Computer – 2 side | Cannon MF 244dw | 3 |
| 10 | Engineering – 2 side | HP Color LaserJet Pro M452dn | 1 |
| 11 | Public health – 2 side | HP Color Laser MFP 178 NW | 1 |
| 12 | Computer Room – 2 side | Sharp Xerox machine | 1 |
| 13 | Dotmatrix Printer | TVS MSP | 2 |
| | | | **17** |

**CCTV Camera**

1) Camera – 20 Nos
2) CCTV – 3 Nos (Commissioner / Chairman / Municipal Engineer Room)
3) TV – 2 Nos

**VC Room**

1) 55” Inches TV – 1 No
2) CPU – 1No
3) Mick – 1 No
4) Web camera – 1 No

**UPS**

1) Mircrotek - 7 KVA / 10 Batteries
2) Mircrotek - 5 KVA / 6 Batteries
3) Mircrotek – 3.5 KVA / 2 Batteries
4) Mircrotek – 1.5 KVA / 1 Batteries

**Projector**

Epson – EBS31 – 1 No

**Net working Items**

1) Computer Room – 24 ports switches
2) Engineering Section – 8 port switches

**Antivirus**

Antivirus Key – 27 users

**Others**

Bio Metric devices - 2 Nos

எனவே மேற்கூறிய இனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள் உடன் சரிபார்த்தல், மேற்படி உபகரணங்களில் ஏதேனும் பழுதடைந்தால், தேவையான உபகரணங்களை புதியதாக பொருத்துதல் மற்றும் அனைத்து கணினிகளுக்கும் Antivirus install செய்தல் பணிகளை Annual Maintenance contract மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2718 / 2022 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 248 / 2022**

15–வது நிதிக்குழு மானியத் திட்டம் 2021-22-ன் கீழ் வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருமின் விளக்குகள் அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அலுவலக கடிதம் ந.க.எண்.31117 / 2021 / CFC, நாள்.14.10.2022 மூலம் ரூ.17.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் தெருமின் விளக்குகள் அமைக்க வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| Name of Work | No of Lights | Estimate Amount in Lakhs |
|---|---|---|
| Providing New Street Light (Online) | 23 | 17.47 |
| Providing New Street Light (New EB Line with LED) | 148 | |
| Providing New Street Light (EB Pole with Line) | 29 | |
| **மொத்தம்** | **200** | **17.47** |

(கோப்பு எண்.1494 / 2021 / இ1)

**தீர்மானம் – பார்வையிடப்பட்டது**

**தீர்மானம் : 249 / 2022**

AMRUT 2.0 திட்டத்தின் கீழ் வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.159, நாள். 08.11.2022 மூலம் கீழ்காணும் விவரப்படி நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கு.

(Rupees in Crores)

| Name of Project | Approval Cost | GOI Share | GOTN share | ULB Share |
|---|---|---|---|---|
| Improvement of water supply distribution system to Vellakovil Municipality | 36.44 | 18.22 | 10.93 | 7.29 |

(கோப்பு எண்.1316 / 2022 / இ1)

**தீர்மானம் – பார்வையிடப்பட்டது**

**தீர்மானம் : 250 / 2022**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி (மேற்கு)–ல் சுமார் 500 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றார்கள். மேற்படி பள்ளிக்கு அருகில் நகராட்சிக்கு சொந்தமான ஆழ்குழாய்கிணறு உள்ளது. மேற்படி கிணற்றில் இருந்து பைப்லைன் மூலம் பள்ளி வளாகத்தில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து பள்ளிக்கு குடிநீர் வசதி வழங்க 11–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார். எனவே மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.58,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2927 / 2022 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 251 / 2022**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 பாண்டியன் நகர் பகுதியில் உள்ள 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க் மட்டுமே உள்ளதால், மேற்படி பகுதிக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடிவதில்லை. எனவே சின்டெக்ஸ் டேங்க்–ஐ 3000 லிட்டர் கொள்ளளவாக மாற்றியும் மற்றும் பழுதடைந்துள்ள மோட்டார் அறையினை சரிசெய்து கொடுக்குமாறு 14–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார். எனவே மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1,95,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3113 / 2022 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 252 / 2022**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09 செம்மாண்டம்பாளையம் ரோடு பகுதியில் கிறிஸ்துவ காலனி சர்ச் அருகில் மற்றும் மேல்நிலைத் தொட்டி (மயானம்) அருகில் குடிநீர் வசதி மேற்கொள்ள 9–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார். எனவே மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.45,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2931 / 2022 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் : 253 / 2022**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09 செம்மாண்டம்பாளையம் பெரியசாமி நகர் பகுதியில் 50 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றனர். மேற்படி பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் வசதி அமைத்துத் தர 9–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார். எனவே மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 3,10,000 /–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3167 / 2022 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது**

**<u>தீர்மானம் : 254 / 2022</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 உப்புப்பாளையம் ஆதிதிராவிடர் காலனி கோவில் அருகில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின்விசை திட்ட மின்மோட்டார் மற்றும் தண்ணீர் தொட்டி உடைந்து பழுதடைந்துள்ளது. எனவே தண்ணீர் தொட்டி மற்றும் 5 கு.வே மின்மோட்டாரை புதியதாக அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள 1–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார். மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1,75,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3167 / 2022 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 255 / 2022</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட ஈரோடு ரோடு பகுதியில் பெரியார் வீதி பிரிவிலிருந்து சூர்யா பேக்கரி வரை குடிநீர் விநியோக குழாய் பழுதடைந்துள்ளது. இந்த குழாய் நெடுஞ்சாலையின் மையப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதால் மேற்படி பழுதினை சரிசெய்ய இயலாது. எனவே இப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தனியார் குடிநீர் இணைப்புகளுக்கு தண்ணீர் வருவதில்லை. எனவே மேற்படி பெரியார் வீதி பிரிவிலிருந்து சூர்யா பேக்கரி வரை GI குழாய் அமைத்து விநியோகக் குழாயினை மாற்றியமைக்க நகராட்சி பொறியாளர் அவர்கள் அறிக்கை அளித்துள்ளார். எனவே மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ 55,000 /– தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3282 / 2022 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் : 256 / 2022</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 தீத்தாம்பாளையம் ஆதிதிராவிடர் காலனி பகுதியில் உள்ள பொதுக்கிணற்றில் மின்மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் டேங்க் மூலம் குடிநீர் விநியோகம் செய்து தரக்கோரி 19–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார். மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 2,30,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2909 / 2022 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது</u>**

**<u>தீர்மானம் : 257 / 2022</u>**

நகராட்சி அலுவலக நிர்வாக வசதிக்காக கீழ்காணும் விபரப்படி அலுவலக அனைத்து அறைகளுக்கும் Intercom வசதிகள் செய்து கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1,65,000 /-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1) நகர்மன்றத்தலைவர் அறை
2) ஆணையாளர் அறை
3) நகராட்சிப் பொறியாளர் அறை
4) பொதுப்பிரிவு
5) பொறியியல் பிரிவு
6) நகரமைப்புப் பிரிவு
7) வருவாய் பிரிவு
8) சுகாதாரப் பிரிவு

9) கணினி அறை

10) காணொளி அறை

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1214 / 2022 / இ1)

<u>தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது</u>

(ஒப்பம்) மு. கனியரசி
நகர்மன்றத்தலைவர்
வெள்ளகோவில் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
வெள்ளகோவில் நகராட்சி